பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 30 செவ்வாய்க்கிழமை 14.07.2020 கதிர் 247

### இனி இது ரகசியம் அல்ல!

கொரோனாத் தொற்றுத் தொடர்பாக முழு நாட்டையும் முடக்கும் நடவடிக்கை கடந்த மாச்சில் முன்னெடுக்கப்பட்ட போது காலவரையறையற்ற ஊரடங்கு நடைமுறைப் படுத்தப்பட்டது.

2

# புதிய அரசில் அமைச்சுப் பதவிகள் பெறும் எண்ணம் அறவே இல்லை!

## சுமந்திரனின் சர்ச்சைப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் சம்பந்தன்



கொழும்பு,ஜூலை 14

புதிய அரசில் அமைச்சுப் பதவி பெறும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில்

2

# மக்களை சாகடிக்காதீர்கள்; தேர்தலை ஒத்திவையுங்கள்

## ஆணைக்குழுவிடமும் அரசிடமும் கோரிக்கை விடுத்துள்ளார் சஜித்

கொழும்பு, ஜூலை 14

மக்களின் உயிர் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியை உடனடியாக ஒத்திவைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அரசிடமும் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

2

# கிளிநொச்சி மக்களே அவதானமாயிருங்கள்!

கிளிநொச்சி, ஜூலை 14

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சியிலுள்ள யாழ். பல்கலைக்கழக தொழில் நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதனால் கிளிநொச்சி வாழ் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கம்பஹாவைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி ஒருவரின் சகோதரருக்குத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில்,

2

# கிளிநொச்சி வளாகம் முற்றாக மூடப்பட்டது

## அங்கு பயிலும் கம்பஹா மாணவி ஒருவரின் சகோதரனுக்கு கொரோனா தொற்று உறுதி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 14

கொரோனா தொற்று அச்சம் காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் நேற்று முதல் முற்றாக மூடப்பட்டுள்ளது.

2

# 14 நாள்களுக்கு பின் ராஜாங்கனையில் தபால் வாக்களிப்பு

வவுனியா, ஜூலை 14

கொரோனாத் தாக்கம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட ராஜாங்கனைப் பிரதேசத்தின் தபால் மூல வாக்குப் பதிவு 14 நாள்களின் பின் நடைபெறும் எனத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் தேர்தல் அதிகாரிகள் மற்றும் வன்னிப் பிராந்திய பொலிஸ் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

2




# எந்தப் பேரினவாதக் கட்சிக்கேனும் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது

## கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் சரவணபவன் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 14

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தப் பேரினவாதக் கட்சிக்கேனும் தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளருமான ஈஸ்வரபாதம்

2

# எந்தக் காரணத்தைக் கொண்டும் தேர்தலைப் பிற்போடவேமுடியாது

## எதிரணிக்கு அரசு பதிலடி

கொழும்பு, ஜூலை 14

இலங்கையில் மீண்டும் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் தொடராக நாடாளுமன்றத் தேர்தல்

2






## எந்தப் பேரினவாதக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சரவணபவன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டு இறுதிப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது வடக்கு மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களை இந்த அரசு கவனிக்கவில்லை. ஏகப்பட்ட துன்பியல்புகளைக் கவனிக்காமல் தமது வெற்றிக்கொண்டாட்டத்தில் மட்டுமே அரசு கவனம் செலுத்தியது. கோயில்களை அழித்தனர், பாடசாலைகளை அழித்தனர், மருத்துவமனைகளை அழித்தனர். இன்னும் என்னவெல்லாம் அழிக்கக்கூடாதோ அவற்றையெல்லாம் அவர்கள் அழித்தனர். ஆனால், இதில் எவையும் உரிய முறையில் அவர்களால் கட்டிக்கொடுக்கப்படவில்லை.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் உரிமையில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அல்லது வேறு எந்தக் கட்சிக்குமோ உரிமை இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாட்ட வேட்பாளர் ஒருவர் இன்று தேர்தல் விதிகள் பலவற்றை மீறி பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். ஆனால், இதுகாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கில் எந்தப் பேரினவாதக் கட்சிக்கேனும் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது.

இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 ஆசனங்ளையும் கைப்பற்றும். அனைத்துக் கட்சிகளும் தமக்குள் பிளவடைந்து நிற்கின்றன. அனைத்துக் கட்சிகளுக்குள்ளும் இருக்கும் பிளவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூடுதல் சாதகம். மக்களும் இதைப் புரிந்து கொண்டு கூட்டமைப்புக்கு வாக்களித்து கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். நாம் எந்தவொரு விடயத்துக்கும் விலை போகாமல் தொடர்ந்து பயணிப்போம் - என்றார்.

## கிளிநொச்சி வளாகம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடத்தில் பயிலும் மாணவி ஒருவருக்கு கொரோனா சந்தேகத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதை அடுத்து வளாகம் முற்றாக மூடப்பட்டுள்ளது.

தொற்றுச்சந்தேகம்ஏற்பட்டதையடுத்து, கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த பரீட்சைகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்த மாணவியின் சகோதரனான இராணுவச் சிப்பாய்க்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்தே அண்மையில் வீட்டுக்குச் சென்று திரும்பிய கிளிநொச்சி வளாக மாணவிக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமை புரியும் கம்பஹாவைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரின் சகோதரன் ஆவார். அவர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றி வரும் ஒரு இராணுவச் சிப்பாய்.

அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, கம்பஹாவில் உள்ள சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கிளிநொச்சி பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு உத்தியோக பூர்வமாகத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்தத் தகவலின் அடிப்படையில், தொற்றுக்குள்ளான இராணுவச்சிப்பாயின் சகோதரி கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயில்வதால், கிளிநொச்சி வளாகம் மூடப்பட்டுள்ளது.

சகோதரனுக்குகொரோனாஉள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள அவரது சகோதரி கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை கம்பஹாவில் இருந்து மதவாச்சி வரை ரயிலில் வந்திறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் கிளிநொச்சிக்கு வந்திறங்கியுள்ளார்.

அவர் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விடுதியில் தனி அறையில் தங்கியிருந்தபோதும் கூட்டு கற்கை, சிற்றுண்டிச் சாலையில் உணவருந்தல் மற்றும் பரீட்சை மண்டபத்தில் ஏனைய மாணவர்களுடன் பழகியிருப்பார் என்ற சந்தேகம் சுகாதாரத் துறையினருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்தே மாணவியை தனிமைப்படுத்துமாறு தகவல் வழங்கப்பட்டது. இதன் காரணமாக கிளிநொச்சி வளாகம் உடனடியாக முடக்கப்பட்டு உள்ளேதங்கியுள்ள மாணவர்களுக்கான உணவு வசதி ஏற்படுத்தப்பட்டதோடு வெளி மாணவர்கள் உள்ளே செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு மாணவியின் உயிரியல் மாதிரி பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பெறுபேறுகள் இன்று

## 14 நாள்களுக்கு பின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்ட ராஜாங்கனைப் பிரதேசத்தின் தபால்மூல வாக்குப் பதிவுகள் 14 நாள்களின் பின் இடம்பெறும். அப்பகுதியில் கொரோனா தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின் அங்கு வாக்குப் பதிவு இடம்பெறும். அத்துடன், தேர்தல் திட்டமிட்டபடி ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறும். கொரோனா தாக்கம் காரணமாக தேர்தலை பிற்போடுமாறு எம்மிடம் எந்தக் கட்சியும் கோரிக்கை முன்வைக்க வில்லை. அப்படி முன்வைக்கவும் தேவையில்லை. தேர்தல் உரிய திகதியில் நடைபெறும் - என்றார்.

## மக்களை சாகடிக்காதீர்கள்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன், திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டால், பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனை ஜனநாயக விரோதச் செயலாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் ஏப்ரலில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் அரசு விடாப்பிடியாக இருந்த நிலையில், நாம்தான் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று தேர்தலைப் பிற்போடுமாறு கோரிக்கை விடுத்தோம். 'டீல்' அரசியல் செய்யாது, தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டினோம். இதையடுத்தே தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், அரசு அழுத்தங்களைப் பிரயோகித்தது. தேர்தல்கள் ஆணைக்குழு பொதுத்தேர்தலுக்கான புதிய திகதியை அறிவிக்காவிட்டால் தாமே திகதியை அறிவித்துவிட்டு தேர்தலை நடத்துவதற்கு எத்தனித்தது. இதன் காரணமாகவே ஆகஸ்ட் 5ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பை விடுக்க வேண்டிய நிலை ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்ட பின்னர், பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கோ அல்லது ஏனைய தரப்புகளுக்கோ நிபந்தனைகளை விதிப்பதற்குத் தார்மீக உரிமை கிடையாது. இவ்வாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டால் எதிரணிக்கே பாதிப்புகள் ஏற்படும். ஏனெனில் எங்களிடம் பண பலம் இல்லை. எனவே, தேவையற்ற நிபந்தனைகளைக் கொண்டுவர வேண்டாம் என்று ஆணைக்குழுவிடமும் அரசிடமும் வலியுறுத்துகின்றேன். அது ஜனநாயக விரோதச் செயலாகவே அமையும்.

நாட்டில் கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆகவே, மக்களின் உயிர் மீது அக்கறை இருந்தால் பொதுத்தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழுவும் அரசும் ஒத்திவைக்க வேண்

## கிளிநொச்சி மக்களே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவருடைய சகோதரி கடந்த 8 ஆம் திகதி கம்பஹாவில் இருந்து ரயில் மூலம் மதவாச்சி வரையிலும், மதவாச்சியில் இருந்து கிளிநொச்சி வரையும் பஸ்ஸிலும் பயணம் செய்திருக்கின்றமையால், பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்த பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் கொரோனாப் பெருந்தொற்று அபாயம் மீண்டும் தோன்றியிருப்பதனால் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல், அவசியமின்றிப் பொது இடங்களில் கூடாதிருத்தல், அவசியமற்ற பொது நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றை தவிர்த்துக்கொள்ளல் போன்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதோடு, தற்போது நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் மூக்கு, வாய் என்பவற்றை மூடிக்கொள்ளும் வகையில் பொது இடங்களில் அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிந்து கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## எந்தக் காரணத்தைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒத்திவைக்கப்படுமா என்ற சந்தேகம் பலமாக எழுந்துள்ள நிலையில், எக்காரணம் கொண்டும் தேர்தல் ஒத்திவைக்கப்படாது என்று அரசின் ஆலோசகரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைவது உறுதியாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கொரோனா வைரஸ் தொற்றைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்க வலியுறுத்தி வருகின்றன. எதிரணிகளின் சுயலாப அரசியலுக்காகத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. திட்டமிட்ட திகதியில் அதாவது ஆகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை - என்றார்.

## புதிய அரசில் அமைச்சுப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சுப் பதவி பற்றி பேச வேண்டிய அவசியமும் இல்லை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கடந்த 11ஆம் திகதி வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றும்போது, 'அரசியல் தீர்வு கிடைக்க எவ்வளவு காலம் எடுக்கும் எனச் சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்வது அத்தியாவசிய தேவை. புதிய ஆட்சியில் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்ன விதமான அதிகாரங்கள் என்பவற்றைப் பேரம் பேச எமக்குப் பலம் இருக்க வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சுப் பதவி தொடர்பான சுமந்திரனின் இந்தப் பேச்சு அரசியல் மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்தப் பேச்சுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் கண்டனங்களையும் தெரிவித்திருந்தன.

இவ்வாறானதொரு நிலையில், புதிய அரசில் அமைச்சுப் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளுமா என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் கேட்டபோது, புதிய அரசில் அமைச்சுப் பதவி பெறும் எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை என்று உறுதியாகப் பதிலளித்தார்.

## இனி இது ........

அச்சமயத்தில் முப்படையினர், சுகாதாரத் துறையினர் போன்ற அத்தியாவசிய சேவைகளைச் சார்ந்தோர் ஊரடங்கின் மத்தியிலும் செயலாற்ற அழைக்கப்பட்டனர். அத்தகைய தரப்பினர் மட்டும் ஊரடங்கு சமயத்தில் நடமாட சிறப்புரிமை அளிக்கப்பட்டனர். அந்த வகையில் இன்னொரு தரப்பினருக்கு அரசும் அதிகார வர்க்கமும் முக்கியத்துவம் கொடுத்தன.

அது - ஊடகத் தரப்பினர். வழமையாக ஊரடங்கு காலத்தை விட கொரோனா தொற்றை ஒட்டிய ஊரடங்கு காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு முக்கிய - சிறப்பான - தனித்துவமான - இடத்தை அரசு தந்து நிற்கின்றது.

அதற்கு விசேட காரணம் உண்டு. கொரோனா போன்ற பேரிடரை வெற்றிகரமாக எதிர்கொள்வதாயின் அதற்கு ஊடகங்களின் - ஊடகவியலாளரின் - பங்கு பணி அத்தியாவசியமாகும்.

நடக்கும் விடயங்கள், நிலைமை குறித்து மக்களுக்குத் தகவல்களும் விழிப்புணர்வும் இருந்தால்தான் - மக்களைச் சரியாகச் செயற்பட வைத்தால்தான் - இந்தப் பேரிடரை வெற்றிகரமாக முகம் கொடுத்துச் சமாளிக்கலாம் என்ற மந்திரம் அரசுக்குத் தெரிந்திருந்தது. அதனால்தான் ஊடகங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஊடகத்துறையும் மிகச் சிறப்பாகத் தன் பங்களிப்பை வழங்கியது.

இப்போது இது குறித்து பிரஸ்தாபிப்பதற்கு முக்கிய காரணம் உண்டு.

கொரோனாத் தொற்று கிளிநொச்சி வளாகம் வரை வந்திருக்கலாம் என்ற முதல் தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட பகுதி சுகாதாரப் பரிசோதகர் வளாகத்துக்கு விரைந்து ஆரம்ப பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முயன்றிருக்கின்றார்.

அச் சமயம் குறுக்கிட்ட வளாக நிர்வாகியான பெண்மணி ஒருவர், யாரைக் கேட்டு உள்ளே நுழைந்தீர்கள் என்ற

கொரோனாத் தடுப்பு விவகாரத்தில் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு உள்ள கட்டுமட்டில்லாத அதிகாரங்கள் தெரியாமல் கதைக்கின்றார் அந்த அம்மணி.

அது மட்டுமல்லாமல், இந்த விடயம் பற்றிய செய்தியை ஏன் பத்திரிகைகளுக்குக் கசிய விட்டீர்கள் என்றும் சிலர் மீது பாய்ந்தாராம். ஊடகங்களுக்கு விடயங்களை ஒளிக்கும் விதத்தில்தான் அவரின் பேச்சு இருந்ததாம்.

வழமையாக எந்த விடயத்தையும் ஊடகங்களுக்கு மறைப்பதுதான் அவரின் விசேடம்.

ஆனால், கொரோனா விடயத்தில் பரவலைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய அம்சம் விழிப்புணர்வு. மக்களுக்கு இயன்றளவு தகவலை வழங்கி, அவர்களை எச்சரிக்கை செய்து உஷார்படுத்தி, தயார்ப்படுத்துவது பிரதான விவகாரமாகும்.

அது கூடத் தெரியாமல் எப்படி ஒரு பல்கலைக்கழகத்தில் உயர் பீடத்தில் உயர் பதவிக்கு வந்தாரோ, எப்படி ஒரு வளாகத்தை நிர்வகிக்கின்றாரோ தெரியவில்லை.

அந்த வளாக மாணவர்கள் பாவம். இப்படி ஒரு நிர்வாகியிடம் சிக்கியமைக்கு...!

***

வடக்கு, கிழக்கு தமிழர்கள் தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வதற்கு ஒரே வழி வடக்கு, கிழக்கில் தங்களின் வாக்குரிமையைப் பதிவு செய்து கொள்வதுதான்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே வாக்குப் பதிவை வைத்ததன் மூலம் இப் பிரதேசத்தில் எங்கள் பிரதிநிதித்துவத்தை நாம் அதிகரிக்க முடியாது.

எனது பிள்ளைகள் வளர்ந்தவர்கள். கொழும்பில் பணி புரிகின்றார்கள். ஆனாலும் நான் என் குடும்பத்தவர்கள் அனைவரினதும் வாக்குரிமையை வடக்கில்தான் வைத்திருக்கின்றேன்.

# மதங்களைக் கடந்த நீதிமான் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்

எமது வேதங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், முனிவர்கள், நாயன்மார்கள் மற்றும் சித்தர்கள் எல்லோருடைய போதனைகளையும் உற்றுநோக்கினால் அவற்றின் சாராம் சமாகக் கிடைப்பது அறம் அல்லது நீதி என்பதை நாம் கண்டுகொள்வோம். மனுநீதி கண்ட சோழனின் வரலாறு உலகமே மெச்சும் தமிழனின் நீதி வரலாறாக இன்று வரை போற்றப்படுகிறது.

அநீதி சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக வெல்வதைப் போன்று தோன்றினாலும் நீதி ஒருபோதும் தோற்றுப் போவதில்லை. சத்தியமும் நீதியும் சூரியனைப் போன்றன, அவற்றை ஒருபோதும் எவராலும் மறைத்துவிடமுடியாது என்று யசுர் வேதம் போதிக்கின்றது. மானுட இனம் அநீதிக்குட்படுகின்றபோதெல்லாம் இறைவன் அந்த மானுடருக்கு ஏதோ ஒரு வடிவத்தில் தன்னுடைய படைப்புக்கள் மூலமாக அருள்புரிந்துகொண்டே இருக்கின்றான்.

ஈழத் தமிழராகிய நாம் பல்வேறுவிதத்திலும் துன்புறுத்தப்படுகின்றோம், அடக்கியாளப்படுகின்றோம், எமது பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து, எமது இனப்பரம்பலை மாற்றியமைத்து, எமது வரலாற்றைத் திரித்து, எம்மை நாடற்றவர்களாக்கும் இரகசிய கைங்கரியம் பேரினவாதிகளாலும் மதவாதிகளாலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

அவ்வாறான ஆக்கிரமிப்புக்களின் போது எமது மக்கள் தமக்கு நீதியைப் பெற்றுத்தர யாருமில்லையே என்று அங்கலாய்க்கும் போதெல்லம் மதங்களைக் கடந்து நீதிக்காய் எழுகின்ற ஒரு சிறந்த ஆளுமையாக **ஜனாதிபதி சட்டத்தரணி M.A.சுமந்திரன்** அவர்களை நான் காண்கின்றேன்.





திரு மதியாபரணன் ஆபிரகாம் சுமந்திரன் அவர்கள் சட்டம், அரசியல் மற்றும் ராஜதந்திரம் ஆகிய மூன்று பரப்புக்களிலும் நன்கு அறிமுகமான பன்முக ஆளுமை கொண்ட ஒரு அரசியல் தலைவராக இருந்தபோதிலும் எமது இந்து சமயத்தவர்களுக்கு மிகவும் நெருக்கமான கோணத்தில் அவரைக் காண்பதற்கு யாராவது தவறியிருந்தால் அச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பது ஒரு இந்து மத குருவாக எனது தலையாய கடமையென நான் உணர்கின்றேன்.

தமிழர் தாயகத்தின் தலைநகராம் திருக்கோணமலையில் கோயில்கொண்டிருக்கும் ஈழத்தின் புராதன ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்திற்கு மேற்கே அமைந்துள்ள கன்னியாய் வெந்நீரூற்று கிணறுகள் சரித்திர பிரசித்தி பெற்ற ஒரு புனித பிரதேசமாக பல நூற்றாண்டுக்காலமாக இருந்து வருகின்றது.



சிவபக்தனான இலங்காபுரி வேந்தன் இராவணனோடு தொடர்புபட்டதும் ஆன்மீக உலகின் அதிசயம் எனப் போற்றப்படுவதுமான ஏழு வெந்நீரூற்றுக்களைக் கொண்டதும், தட்ஷணகைலாச புராணம், வீரசிங் காத புராணம், திருகோணாசல புராணம் போன்ற பல்வேறு புராணங்களால் விதந்துரைக்கப்பட்ட பெருமைகொண்டதும், அகத்திய மாமுனியின் மனங்கவர்ந்த தலங்களைக் கொண்டதுமான இப் புண்ணிய தலம் இராவண மன்னன் தனது தாயாருக்கு பிதிர்கடன் நிறைவேற்றிய தீர்த்தம் என்ற ஐதீகத்தின் தொடர்ச்சியாக இந்துக்கள் தமது பிதிர் கடன்களை தீர்க்கும் புனித இடமாக இன்று வரை போற்றப்படுகின்றது.

இங்கிருந்த பூர்வீகமான பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த இடத்தில் பௌத்த தாதுகோபுரமொன்றை அமைக்க, வில்கம் விகாரை பிக்குமார் எடுத்துவரும் பிரயத்தனங்களுக்கு தொல்பொருள் திணைக்களமும் உடந்தையாக இருந்து வரும் நிலையில் அண்மையில் பிள்ளையார் ஆலயம் இருந்த பூர்வீக மேட்டில் பௌத்த தாது கோபுரம் அமைக்க எடுத்த முயற்சிக்கு எதிராக **ஜனாதிபதி சட்டத்தரணி M.A.சுமந்திரன்** அவர்கள் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடை உத்தரவு பெற்றுக் கொடுத்தார். பறிபோகவிருந்த இந்து சமயத்தவரின்புண்ணியதீர்த்தமொன்றுபாதுகாக்கப்பட்டது.

வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேழிச் செல்வமாம் நெல் விளைவிக்கும் உழவர் பெருமக்களின் பாரம்பரிய வழிபாட்டிடமான பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் அதன் தீர்த்தக் கரைக்கு அருகில் பௌத்த பிக்கு ஒருவரின் பூத உடலானது தகனம் செய்யப்படக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவையும் மீறி இந்து மக்களின் மத நம்பிக்கைக்கு முரணாக குறித்த உடலம் எரியூட்டப்பட்டது. இதனை எதிர்த்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முல்லைத்தீவு மக்கள் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கில் வழக்குரைஞராக **ஜனாதிபதி சட்டத்தரணி M.A.சுமந்திரன்** அவர்களே ஆஜராகி வருகின்றார்.

குறித்த வழக்கை விசாரித்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளால், இந்து சமயத்தவர்களின் மனம் புண்படும் வகையில், நீதவான் நீதிமன்றக் கட்ட ளையை மீறி செயற்பட்ட பௌத்த பிக்குவை மன்றில்ஆஜராகுமாறுகட்டளையிடப்பட்டுள்ளது.



வரலாற்று ரீதியாக இலங்கையின் நான்கு திசைகளிலும் நான்கு ஈச்சரங்கள் இருந்து இலங்கையைக்காவல்காத்ததாகக் கூறப்படுகிறது. இவற்றுள் மேற்கே அமைந்துள்ளது திருக்கேதீச்சரமாகும்.

இந்நாட்டுப் பழங்குடியினராகிய நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத்திருக்கோயிலிற்கு நாகநாதர் கோயிலெனவும் பெயர் வழங்கி வந்துள்ளது. கேது வழிபட்ட தலமாதலால் திருக்கேதீச்சரமாயிற்றென்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சோழ, பாண்டிய மன்னர்கள் பல திருப்பணிகளை இத் திருக்கோயிலிற்கு ஆற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப் பாண அரசர்கள் நித்திய நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையுங் கொண்ட திருத்தலம் இதுவாகும்.

கிபி ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயானாராலும், சுந்தர மூர்த்தி நாயனாராலும் போற்றிப் புகழ்ந்து திருப்பதிகம் பாடப் பெற்ற சிறப்புடையதலம்இதுவாகும். அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகளின் திருதாண்டகத்திலும், சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருக்கிறது.

பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில்இக்கோயில் சோழமன்னர்களால்இராசராசேஸ்வரமாகாதேவன்கோயிலெனவும் அழைக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீச்சரத்திருத்தலத்தில் அமைந்துள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடுவோர்க்கு பிரமஹத்தி போன்ற பாவங்கள் நீங்கி புண்ணியம் கிட்டும் என்பது தொன்றுதொட்டு நிலவிவரும் ஐதீகமாகும்.

மகாசிவராத்திரி விரத தினத்தில் இலங்கைமுழுவதுமுள்ளசிவபக்தர்கள் இவ்வாலயத்தில் ஒன்றுகூடி பாலாவியில் நீராடி பாலாவித் தீர்த்தத்தினால் அங்கு எழுந்தருளியிருக்கும் புராதன லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து நித்திரை விழித்து சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பர்.

கடந்த வருடம் மகா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீச்சர ஆலயம் செல்லும் வீதிமுகப்பில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவு தவறாக வழிநடத்தப்பட்ட சில சகோதரர்களால் உடைத்தெறியப்பட்டபோது உனது ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு எனறு இயேசு நாதர் கூறியது போல பொறுத்துக்கொண்டாலும் அச் சிறியோரின் அறிவற்ற செயல் கண்டு மனம்நொந்து கொண்டோம். ஆயினும் ஒன்றாக இருக்கும் தமிழ் மக்களை மதங்கள் இரண்டாகப் பிரித்துவிடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையிலும், மதநல்லிணக்கத்தின் அடையாளமாகவும் திருக்கேதீச்சர ஆலய வீதி முகப்பு வளைவு உடைக்கப்பட்டது தொடர்பான மன்னார் மேல் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் திருக்கேதீச்சர ஆலயம் சார்பில் **ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்** அவர்களே ஆஜராகி வருகின்றார் என்பதோடு குறித்த வளைவு மீண்டும் நிறுவப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்து வருகிறார்.


இவ்வாறு மதங்களைக்கடந்த நீதிமானாக தமிழ் இனத்திற்கு ஆற்றிவரும்அளப்பரிய சட்டப் பணியைக் கௌரவித்து இவ் வருடம் தைத் திங்கள் அகில இலங்கை கம்பன் கழகம் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் வெகு கோலாகலமாக நடாத்திய கம்பன்விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளரும் ஆகிய **ஜனாதிபதி சட்டத்தரணி M.A.சுமந்திரன்** அவர்கள் **தரம் மிகுந்த போராளி** என்ற உயர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். மேற்படி கௌரவிப்பின் போது திரு M.A.சுமந்திரன் அவர்களது சிறப்பு பின்வருமாறு புகழ்ந்து பாடப்பெற்றது.

## தரம் மிகுந்த போராளி

**சட்டத்துறை புகுந்து தமிழர்களின் புகழ் நிலைக்க**
**எட்டாத வெற்றிகளை எட்டித் தலைநிமிர்ந்தோன்!**
**முட்டிப் பகைவர்களின் முன்னின்று தமிழ் உரிமை**
**தட்டிக் கேட்கின்ற தரம்மிகுந்த போராளி!**

**இவ்வண்ணம்**
**சிவஸ்ரீ. விக்கினராஜ ஐயர் பாலகுமாரக்குருக்கள்**
**கிராம்புவில், சாவகச்சேரி**





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தன் வைத்த முற்றுப்புள்ளி

**"புதிய அரசில் அமைச்சுப் பதவி பெறுகின்ற எண்ணம் எதுவுமே எம்மிடம் இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அப்படியான கொள்கையே இல்லை. தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை."**

**- இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசின் தலைவருமான இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.**

**இதன் மூலம் இவ்விடயத்தை ஒட்டி சுமந்திரன் எழுப்பிய சர்ச்சையை ஒரேயடியாகக் குழி தோண்டிப் போட்டு மூடியிருக்கின்றார் சம்பந்தன்.**

**இந்த விடயத்தில் சுமந்திரன் தெரிவித்த பரபரப்புக் கருத்து, இலங்கைத் தமிழரசினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அடிப்படை நிலைப்பாட்டில் ஏற்படும் முக்கிய மாற்றம் என்றும் -**

**இந்த மாற்றம் பற்றிய முடிவை சம்பந்தன், மாவை சேனாதிராசா போன்ற மூத்த தலைவர்களின் கலந்தாலோசனையின்றி சுமந்திரன் தம்பாட்டிலேயே வெளியிட்டிருக்கின்றார் என்றும் -**

**நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அதனை சம்பந்தனின் தற்போதைய அறிவிப்பு உறுதி செய்திருக்கின்றது.**

**இந்த விடயத்தில் தமிழரசினதும் கூட்டமைப்பினதும் ஏனைய தலைவர்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றனர் என்ற சாரப்பட இப்பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தோம்.**

**பலரும், பல விதமாக கருத்துக் சொல்லி, கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் உள்முரண்பாடுகளும், குத்துவெட்டுகளும் தாராளமாக இருக்கின்றன என்று காட்டுவதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் அப்படி மௌனம் காத்திருக்கக் கூடும்.**

**கட்சியினதும், கூட்டமைப்பினதும் பேச்சாளர் கூறிய கருத்துக்கு ஏனைய தலைவர்கள் பதிலடி கொடுப்பதிலும் பார்க்க, கூட்டமைப்பினது தலைவரும், தமிழரசின் அரசியல் குழுத் தலைவரும், முதிர்ந்த அரசியல்வாதியுமான சம்பந்தன் ஐயா மூலம் மறுக்கச் செய்வது வீண் குழப்பங்களையும் அபவாதங்களையும் தவிர்க்க வைக்கும் என்று அவர்கள் கருதியிருக்கலாம். அதற்காகத்தான் அவர்கள் மௌனமும் பொறுமையும் பேணியிருந்தால் அது வரவேற்கத்தக்க நல்ல விடயமே.**

**அதுமட்டுமல்லாமல், அதே அணுகுமுறையை கூட்டமைப்பும் தமிழரசும் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால், அவற்றின் உயர்வு நிச்சயம்.**

**தென்னிலங்கைச் சிங்களச் செய்தியாளரின் ஆக்ரோஷக் கேள்விகளுக்கு சுமந்திரன் பதிலளித்த விடயத்தையும் தமிழரசு மற்றும் கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்வாறு கையாண்டிருப்பார்களாயின் விவகாரம் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் எதிரான விடயமாக நாறியிருக்காது; மாறியிருக்காது.**

**அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்வது தொடர்பான சுமந்திரனின் கருத்தை சம்பந்தன் மறுதலித்தமையில் ஆழமான கோட்பாட்டு விவகாரம் ஒன்று தங்கியுள்ளது.**

**தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்காகத் தீர்வு தேடி நீண்ட காலமாக முன்னெடுக்கப்படும் போராட்டம் 2009 யுத்தத்தின் இறுதிக் கட்டத்தோடு புதிய தடத்துக்குள் நுழைந்து விட்டது.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் நீதி விசாரணைகளை நடத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதி செய்யும் விடயங்களுடன் மீள் நல்லிணக்கம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் போன்ற விவகாரங்கள் முடிச்சுப் போடப்பட்டிருக்கின்றன.**

**முன்னைய விடயத்தைப் புறம் ஒதுக்கி, பின்னையதை எட்டுவதற்கான சாத்தியங்கள் பெரும்பாலும் குறைவு.**

**அமைச்சுப் பதவியை ஏற்பது தொடர்பான சுமந்திரனின் கருத்துக்கு எதிராகக் கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார்.**

**அதுவும் யுத்தக் காலக் கொடூரங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய தரப்புகளே மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருவது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கையில்,**

**அந்தத் தரப்புகளோடு ஒரே அமைச்சரவையிலும் அரசிலும் அங்கம் வகிப்பது என்பதும், அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்புக்கு இணங்குவது என்பதும் சாத்தியப்படக் கூடியதேயல்ல -**

**சர்வதேச ரீதியில், பொறுப்புக் கூறல் விவகாரத்துக்கு அடிபணிய மறுக்கும் ஓர் அரசிலும், அதன் அமைச்சரவையிலும் இருந்து கொண்டு அதே அரசிற்கு எதிராகப் பொறுப்புக் கூறல் விவகாரத்தை உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் வலியுறுத்துவது என்பது ஒருபோதும் சாத்தியப்பட மாட்டாது.**

**இந்த அடிப்படையில்தான் சுமந்திரனின் மேற்படி கருத்துக்கு ஒரேயடியாக மறுப்பு வெளியிட்டு விடயத்தை மூடிப் புதைத்திருப்பார் சம்பந்தன் என்று கருதலாம்.**

**இந்தத் தேர்தல் சமயத்தில் இந்தச் சர்ச்சை தேவையற்றது என்ற கருத்துச் சரியானதே.**

# இரண்டாவது கொரோனா அலையை யாழில் முறியடிக்க ஒத்துழையுங்கள்!

## பொதுமக்களிடம் அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழில் இரண்டாவது கொரோனா அலையினை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு, அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்க வேண்டுமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொரோனாஅபாயம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்தின் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பத்தில் 16 பேர் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் தற்போது 14 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் மூன்று குடும்பம் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்குச் சென்று வந்தவர்கள் என்ற அடிப்படையிலும், ஒரு குடும்பம் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து வருகை தந்தவர்கள் என்ற அடிப்படையிலும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டுள்ளார்கள். மொத்தமாக நான்கு குடும்பங்களை சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றினைத் தடுக்கும் செயற்பாடானது சுகாதார திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்களுடைய செயற்பாட்டின் மூலமே யாழில்கொரோனாவைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம். தற்பொழுது இது சமூகத் தொற்றாக உருவாக கூடிய அபாயம் காணப்படுவதாக உணரப்படுகின்றது.

இந்தக்கட்டத்தில் இரண்டாவதுஅலையாக - அதாவது முன்னரோடு ஒப்பிடும்போது நாளாந்தம் அறிக்கையிடப்படுகின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது நோயாளர்களின் எண்ணிக்கை சற்று கூடுதலாகவே காணப்படுகின்றது.

யாழ் குடாநாட்டில் உள்ள அனைத்து பொதுமக்களும் மிகவும் விழிப்பாக இருந்து இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுகாதார பிரிவினரின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அநாவசியமாக போக்குவரத்தில் ஈடுபடாது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மேலும் பாடசாலைகள் ஒரு கிழமைக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலகங்கள் யாவும் சீராக இயங்கி வருகின்றன. எனினும் தேவையுடையவர்கள் மட்டும் அலுவலகங்களுக்கு வருக. தந்து தங்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதே வேளையில் ஏனைய பொது தொடர்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொது மக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதே நேரத்தில் இன்னுமொரு அபாயம் யாழ்ப்பாண மாவட்டத்திலே காணப்படுகின்றது. தற்போது இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக யாழ் குடாநாட்டுக்கு வருவோரின் எண்ணிக்கைஅதிகமாகக்காணப்படுகின்றது. நேற்று முன்தினம் கூட நான்கு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள்தொடர்பானசட்டநடவடிக்கை பொலீஸ் மற்றும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாக இருந்தால் இவ்வாறு சட்டவிரோதமாக வருபவர்களைத் தடுக்க வேண்டும். அதாவது உங்களுடைய உறவினர்களோ அல்லது உங்களுக்கு தெரிந்தவர்களோ இவ்வாறான விடயங்களை அறிந்திருந்தால் அது தொடர்பில் அருகில் உள்ள கிராம சேவையாளர் அல்லது பொலிஸார் அல்லது அதற்குரிய அதிகாரிகளுக்கு உடனடியாக தெரியப்படுத்துங்கள். மேலும் எங்களுடைய யாழ்குடாநாட்டைகொரோனாதொற்றிலிருந்து பாதுகாப்பது பொதுமக்களுடைய கைகளில் தான் தற்போது இருக்கின்றது. ஆகவே நாம் எவ்வளவு சுகாதார சுகாதார துறையினரின் அறிவுறுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதனைப் பின்பற்றுகின்றோமோ அதன் மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனாவை கட்டுப்படுத்த முடியும். எனவே அனைத்து பொதுமக்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அதாவது இந்த இரண்டாவது அலையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்க வேண்டும். - எனவும் தெரிவித்தார்.

# கொரோனா வைரஸ் விரைவில் கட்டுக்குள்

## 'மொட்டு' நம்பிக்கை

கொரோனா வைரஸ் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். திட்டமிட்ட வகையில் பொதுத்தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

தலவாக்கலைப் பகுதியில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்குள் கொரோனா வைரஸ் சாதகமான முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும், துரதிஷ்டவசமாக இடம்பெற்ற ஒரு சம்பவத்தால் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிலைமையையும் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான பலம் எமது சுகாதாரப் பிரிவினர், முப்படையினர், பொலிஸார் மற்றும் அரசுக்குக்கு இருக் கின்றது.

தற்போதைய நிலையால் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பங்கேற்கும் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பாரியளவு கூட்டங்களை நடத்தாமல் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சிறு அளவிலான கூட்டங்களை நடத்துமாறு எமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. நிலைமை விரைவில் சீராகிவிடும். எனவே, திட்டமிட்டுள்ளவாறு தேர்தல் நடைபெறும்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் அறிவிப்புகள் எல்லாம் சிறுபிள்ளைத் தனமாகவே இருக்கின்றன. எனவே, அவற்றைச் செவிமடுத்து சிரிக்கலாம். பதிலளிக்கும் அளவுக்கு அவை முக்கியத்துவம் இல்லை. பொதுத்தேர்தலில் நிச்சயம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெறுவோம் – என்றார்.

## அமிர் நினைவு அனுஷ்டிப்பு

அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 31ஆவது நினைவு தினம், நேற்று பண்ணாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு அருகில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றி உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு பின்னர் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் என்.நடனேந்திரன், எம்.கே சிவாஜிலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கும் திட்டம் ஏதும் அரசுக்கு இல்லை

## அமைச்சர் பந்துல குணவர்தன தகவல்



கொழும்பு, ஜூலை 14

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படமாட்டாது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் மாத்திரமே பலப்படுத்தப்படும் என்பதனால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் மூலம் சமூகத் தொற்று பரவ வாய்ப்பில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

தேர்தலை இலக்காகக் கொண்டு சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைளை அரசாங்கம் தளர்த்தவில்லை என்றும் கடந்த மூன்று மாத காலமாக நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும், சுகாதர அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட மாட்டாது என்றும் அதற்கான தேவை தற்போது இல்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினை எதிர்கொள்ள சுகாதார தரப்பினரும், பாதுகாப்பு தரப்பினரும் தயாராகவே உள்ளார்கள் என குறிப்பிட்ட அமைச்சர் பந்துல குணவர்தன, அரசாங்கம் முறையாக தொற்றை கட்டுப்படுத்தும் என்பதனால் மக்கள் அச்சமடைய தேவையில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

## கஞ்சிபான கோரிக்கை

தற்போது பூஸா சிறைச்சாலையில் உள்ள தன்னை தென் மாகாணத்திற்கு வெளியில் உள்ள வேறு ஏதாவது ஒரு சிறைச்சாலைக்கு மாற்றும்படிஅதிகாரிகளிக்குஉத்தர விடுமாறுகோரிபாதாளஉலக குழுதலைவரானமொஹமட் வசீம் மொஹமட் இம்ரான் எனும் கஞ்சிபான இம்ரான் உயர்நீதிமன்றத்தில்மனுஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் துார உப்புல் தெனிய, பூஸா சிறைச்சாலை அதிகாரி, அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா ஆகிய ஒன்பது பேரின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

## வட்டுக்கோட்டையில் இருவர் 120 கிலோ கஞ்சாவுடன் கைது

120 கிலோ கிராம் தொகை கஞ்சாவுடன் இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் சந்தேகம் ஏற்படாத வகையில் துவிச்சக்கரவண்டியில் வைத்து கடத்தப்பட்ட கஞ்சா பொதியினையும் அதை கொண்டு சென்ற இருவரையுமே வட்டுக் கோட்டை பொலிஸார் நேற்று இரவு10மணியளவில்கைதுசெய்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் வறுத்தோலை பகுதியில் துவிச்சக்கரவணிடியில் 120 கிலோ கஞ்சாவை பொதிசெய்து பின்பகுதியில் கட்டி துவிச்சக்கரவண்டியை உருட்டியபடிசென்றஇருவரைவட்டுக்கோட்டை பொலிஸார் சுற்றிவளைத்து சோதனை செய்தனர். இதன் போது பொதிக்குள் கஞ்சா இருப்பதை உறுதி செய்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் அப் பகுதியை சேர்ந்த 40, 32 வயதுடைய குடும்பஸ்தர்கள் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரனையின் பின்னர் நேற்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஆனந்தராஜாமுன்னிலையில்முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 27ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## பஸ்களில் பொருள்களை விற்பனை செய்யத் தடை

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைத் தொடர்ந்து, அனைத்துத் தனியார் மற்றும் இ.போ.ச. பஸ்களில் இடம் பெறும் பல்வேறு வகையான விற்பனை நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு, போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர குறித்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

சில நடமாடும் விற்பனையாளர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் செயற்படுகின்றனர் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சிடம், பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். இதேவேளை, கடந்த மார்ச் மாதம் முதல் ரயில்களில் நடமாடும் விற்பனையாளர்கள் நுழைவதற்கு இலங்கை ரயில் திணைக்களம் தடை விதித்திருந்தது.

இவ்வாறான விற்பனையாளர்களினால் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவக்கூடிய சாத்தியம் இருப்பதால், இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## வாக்களிப்பதற்கு விடுமுறை கட்டாயம் வழங்க வேண்டும்

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக கோரிக்கை விடுக்கும் எந்தவொருநபருக்கும்விடுமுறைவழங்கப்பட வேண்டும்எனதேர்தல்கள்ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் சேவை செய்யும் இடத்தில் இருந்து வாக்குச் சாவடி உள்ள தூரத்தின் அடிப்படையில் விடுமுறை வழங்க வேண்டும் என அந்த ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்கமைய 40 கிலோ மீற்றருக்கு குறைவாயின் அரை நாள் விடுமுறையும் 40 முதல் 100 கிலோ மீற்றர் இருப்பின் ஒரு நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 100 முதல் 150 கிலோ மீற்றர் தூரமாயின் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கு அதிகமாயின் இரண்டு நாள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ரூ.4 லட்சத்து 43 ஆயிரம் தண்டம் 11 போக்குவரத்துக் குற்றங்களுக்கு

### ஒரே நாளில் யாழ் நீதிமன்று வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாண போக்குவரத்து பிரிவு பொலிஸாரால் முற்படுத்தப்பட்ட வழக்குகளில் ஒரே நாளில் மட்டும் 4 லட்சத்து 43 ஆயிரம் ரூபா தண்டம் யாழ் நீதிவான் நீதிமன்றால் அறவிடப்பட்டுள்ளது.

யாழ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் யாழ் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக் கைகளில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பிலான 11 வழக்குகள் நேற்று யாழ் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டன.

இதில் சந்தேக நபர்கள் அனைவரும் குற்றத்தை ஒப்புகொண்டமையுடன் நீதிமன்றத்தினால் மொத்தமாக நான்கு லட்சத்து நாற்பத்து மூவாயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

இதில் மதுபோதையில் வாகனம் ஓட்டிய குற்றச்சாட்டில் நான்கு பேரிடம் தலா 25 ஆயிரம் ரூபா படி மொத்தமாக ஒரு லட்சம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் ஓட்டியமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் ஓட்டிய குற்றச் சாட்டில் நான்கு பேரிடம் தலா ருபா 50 ஆயிரம் படி 2 லட்சம் ரூபாவும், மது போதையில் வாகனம் ஓட்டியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை மற்றும் பொலிஸ் எச்சரிப்பை மீறியமை போன்ற குற்றச்சாட்டில் ஒருவரிடம் 60 ஆயிரம் ரூபாவும் மது போதையில் வாகனம் ஓட்டியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, பொலிஸ் எச்சரிப்பை மீறியமை, வாகன வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச் சாட்டில் ஒருவரிடம் 80 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும், தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் ஒருவரிடம் ரூபா 2,500 தண்டப் பணமுமாக மொத்தமாக 4,43,000 ரூபாய் தண்டம் ஒரே நாளில் விதித்து நீதிமன்றால் நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# சீனாவை நாடுகள் வெறுப்பது இந்தியாவுக்கு நல்ல வாய்ப்பு!

## நிதின் கட்காரி தெரிவிப்பு



உலகநாடுகள் சீனா மீது வெறுப்புக் காட்டி வருவதும், சீனா மீது அதிக ஆர்வம் காட்டாத சூழல் நிலவுவதும் இந்தியத் தொழிற்சாலைகளுக்குப் பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது என்று இந்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்தார்.

இந்தியாவின் வீதிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்காரி இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

உலகப் பொருளாதாரச் சூழல் நமக்குச் சாதகமாக உள்ளது. சீனாவுடன் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள உலக நாடுகள் அதிக விருப்பம் காட்டவில்லை. இது இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளுக்குக் கிடைத்த பெரிய சந்தர்ப்பம்.

இது ஒரு மறைமுக ஆசீர்வாதம் ஆகும். இந்தச் சூழ்நிலையை நமக்குச் சாதகமாக நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதிக போட்டியை ஏற்படுத்த முடியும். தரத்தில் கவனம் செலுத்த முடியும். இந்தியாவில் நிறுவனங்கள் வர்த்தகம் தொடங்குவதற்கான சூழல் இலகுவாக்கப்பட்டுள்ளது. இதற்கான தரவரிசையில், இந்தியாவின் இடம் உலக வங்கியால் முன்பே உயர்த்தி அறிவிக்கப்பட்டது.

ஆனால், வர்த்தகம் தொடங்குவதற்கான அனுமதி, சான்றிதழ் உள்ளிட்டவற்றை பெறுவதில் அதிக சிக்கல் உள்ளது. இதனால் அனைத்து நடைமுறைகளையும் டிஜிட்டல் மயம் ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.), வேளாண் வளர்ச்சி விகிதம் மற்றும் கிராமப்புறத் தொழிற்சாலை வளர்ச்சி ஆகியவற்றை அதிகரிப்பதே நம்முடைய குறிக்கோள் என்றார்.



# சுந்தர் பிச்சை மோடி பேச்சு!

விவசாயிகள், இளைஞர்கள், தொழில் முயற்சியாளர்கள் குறித்துக் கூகுள் நிர்வாகி சுந்தர் பிச்சையுடன் பேசினேன் என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

சுந்தர் பிச்சையுடன் காணொலிக்காட்சி மூலமாக ஆலோசனை மேற்கொண்ட மோடி அதன்போது, வேலைச் சூழலில் கொரோனாத் தொற்று ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள், மற்றும் தகவல் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து ஆலோசித்ததார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மோடி தனது கீச்சகப் பக்கத்தில் கூறியதாவது:-

கூகுள் தலைமை நிர்வாகி சுந்தர்பிச்சையுடனான கலந்துரையாடல் மிகவும் ஆக்கபூர்வமாக இருந்தது. கொரோனாவால் ஏற்பட்டுள்ள சவால்கள், தகவல் பாதுகாப்பு குறித்து விவாதித்தோம். கல்வி, டிஜிற்றல் முறையில் பணம் செலுத்துவதில் கூகுளின் செயற்பாடு குறித்தும் கேட்டறிந்தேன்.

குறிப்பாக இந்தியாவின் விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்காகத் தொழில்நுட்பத்தின் ஆற்றலை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பல துறைகளில் கூகுள் நிறுவனத்தின் புதிய முயற்சிகளைப் பற்றி அறிந்து கொண்டேன் என்றார்.

# வேலைகளைத் துரிதமாக முடிக்க வேண்டும் அரச ஊழியர்களுக்கு அதிரடி உத்தரவு!



கொரோனாத் தொற்றுக் காரணமாக சரி அரைவாசி ஊழியர்களுடன் அரச அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

இதனால் சேவையிலுள்ள ஊழியர்கள் துரிதமாகச் செயற்பட்டு தமது வேலைகளை முடிக்க வேண்டும் என்று இந்திய அரசு உத்தரவு பிறப்பித்தது.

கொரோனா காலத்தில் அதிகாரிகள் பணிகளை இழுத்தடித்து வருவதாகவும், நிறைவடைந்த பணிகளை உயரதிகாரிகளின் மேற்பார்வைக்குக் கொண்டு செல்லாமல் அலைக்கழிப்பதாகவும், பல லட்சங்கள் வட்டிக்கு கடன் வாங்கி பணிகள் செய்து கொடுப்பதாகவும், நிறைவடைந்த பணிகளுக்கு பணம் வழங்காமல் அதிகாரிகள் இழுத்தடிப்பதாகவும் முறைப்பாடுகள் எழுந்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச அலுவலகங்களுக்கும் முதன்மைச் செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா இந்த உத்தரவைப் பிறப்பித்தார். வாரத்தில் 6 நாள்கள் வேலை நாள்களாக அறிவிக்கப்பட்டு, காலை 10.30 மணிக்குள் அரச ஊழியர்கள் அலுவலகம் வர வேண்டும். நிலுவையில் உள்ள கோப்புகளை விரைந்து முடிக்க வேண்டும். ஊழியர்கள் சரியாகப் பணிக்கு வருவதை அறிக்கையாக தயாரித்து தினமும் பணியாளர், நிர்வாகச் சீர்திருத்த துறைக்கு அனுப்பவும் உத்தரவிட்டுள்ளார்.

# பாம்பு தீண்டி இந்தியாவில் ஒரு மில்லியன் பேர் இறப்பு!



இந்தியாவில் நாக பாம்புகள் தீண்டி ஒவ்வோர் ஆண்டும் பெரும்பாலான மக்கள் இறக்கின்றனர் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் 1.2 மில்லியன் மக்கள் பாம்பு தீண்டி இறந்துள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு இறந்தவர்களில் பலர் 30 முதல் 69 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் குறைந்த தொகையினர் குழந்தைகள் என்றும் அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ரஸ்ஸலின் வைப்பர்கள், க்ரெய்ட்ஸ் மற்றும் கோப்ராஸ் ஆகிய பாம்பினங்கள் பெரும்பாலான இறப்புகளுக்குக் காரணமாக இருந்தன. மருத்துவ வசதி இல்லாத பகுதிகளில் நிகழ்ந்த இந்த இறப்புகள் அதிகரித்திருப்பதும், ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் பருவமழைக் காலத்தில் இறப்புகள் அதிகரித்திருப்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. குறித்த காலத்தில் பாம்புகள் அதிகளவில் வெளியே உலாவுகின்றன என்று அறியப்படுகிறது.

உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் 81ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 38ஆயிரம் பேர் வரை பாம்பு தீண்டி இறக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

## கேரள தங்கக்கடத்தல் விவகாரம்

# கைதானவர்களைச் சிறைப்படுத்தி விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் நடந்த தங்கக் கடத்தல் வழக்கில் ஸ்வப்னா, சந்தீப் ஆகியோரை 8 நாள்கள் காவலில் வைத்து விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் இந்தியத் தேசிய புலனாய்வு முகமைக்கு அனுமதி வழங்கியது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

திருவனந்தபுரத்தில் உள்ள ஐக்கிய அரபு இராச்சியத் தூதரகத்தின் பெயரில் சரக்கு விமானத்தில் கடத்தி வரப்பட்ட 30 கிலோ தங்கத்தை விமான நிலையச் சுங்க அதிகாரிகள் கடந்த 5ஆம் திகதி கைப்பற்றினர். இந்தக் கடத்தல் தொடர்பாகத் தூதரகத்தின் முன்னாள் ஊழியர் சரித் கைது செய்யப்பட்டார். இந்தக் கடத்தலில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் ஸ்வப்னா சுரேஷ் என்ற, மாநிலத் தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) துறை முன்னாள் ஊழியர் மற்றும் சந்தீப் நாயர் ஆகியோர் தலைமறைவாகினர்.

இவர்கள் 3 பேர் மட்டுமின்றி எர்ணாகுளத்தைச் சேர்ந்த பாசில் பரீத் ஆகிய 4 பேர் மீதும் உபா சட்டத்தின் கீழ் தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்தனர். இதைத்தொடர்ந்து ஸ்வப்னா சுரேஷ் உள்ளிட்டோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன.

அதன் பலனாக ஸ்வப்னா சுரேஷ் மற்றும் சந்தீப் நாயர் இருவரும் பெங்களூருவில் கைது செய்யப்பட்டனர். கொச்சியில் உள்ள தேசிய புலனாய்வு அமைப்புச் சிறப்பு நீதிமன்றத்தில் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை 30ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.



10 நாள்கள் காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி கேட்ட நிலையில் நீதிமன்றம் 8 நாள்கள் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. இது வரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இருந்து குறித்த தங்கக் கடத்தலின் மூலம் தீவிரவாதத் தாக்குதல்களுக்குப் பணம் சேர்க்கப்பட்டது என்று தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மருந்து மனிதர்கள் மீது வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது!





## ரஷ்யா அறிவிப்பு

உலகின் முதல் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. சீனாவில் கடந்தாண்டு இறுதியில் கண்டறியப்பட்டதாக அறியப்படும் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் உலகம் முழுவதும் 1.28 கோடிக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 5.68 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். எனவே இந்த நோய்த்தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்தை உருவாக்குவதற்கு உலகம் முழுவதும் 120க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், ரஷ்யாவை சேர்ந்த பல்கலைக்கழகம் ஒன்று கொரோனா தடுப்பு மருந்தை உருவாக்கி அதை மனிதர்களிடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதனை செய்துள்ளது என்று அறிவித்துள்ளது. இந்தத் தகவலை இன்ஸ்சிற்றியூட் ஃபார் ட்ரான்ஸ்லேஸ்னல் மெடிசன் அண்ட் பயோரெக்னோலஜி என்ற நிறுவனத்தின் இயக்குநர் வாடிம் டாரசோவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகின் முதல் கொரோனா தடுப்பு மருந்தை வெற்றிகரமாக மனிதர்களிடம் பரிசோதனை செய்துள்ளோம். மொஸ்கோவில் உள்ள செச்செனோவ் அரச மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தன்னார்வலர்களைக் கொண்டு மேற்கொண்ட இந்த பரிசோதனையில் நாங்கள் உருவாக்கியுள்ள தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்று தெரியவந்துள்ளது.

இந்தப் பரிசோதனையில் பங்கேற்ற முதல் குழுவினர் ஜூலை மாதம் 15ஆம் திகதியும், இரண்டாவது குழுவினர் ஜூலை மாதம் 20ஆம் திகதியும் வீடு திரும்புவார்கள் என்றார். ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் உள்ள கமலே இன்ஸ்டிடியூட் ஒவ் எபிடெமியாலஜி அண்ட் மைக்ரோபயோலஜியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய இந்தத் தடுப்பு மருந்தை மனிதர்களிடத்தில் பரிசோதிக்கும் பணியை ஜூன் மாதம் 18ஆம் திகதி செச்செனோவ் பல்கலைக்கழகம் தொடங்கியது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள செச்செனோவ் பல்கலைக்கழகத்தின் இயக்குநர்களில் ஒருவரான அலெக்சாண்டர் லுகாசேவ், நாங்கள் உருவாக்கி யுள்ள கொரோனா தடுப்பு மருந்து மனிதர்களுக்குப் பாதுகாப்பானதா, இல்லையா என்பதைக் கண்டறி வதையே நோக்கமாக கொண்டிருந்தோம். பரிசோதனையின் முடிவில் இந்த தடுப்பு மருந்து பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது’ என்று தெரிவித்தார்.

# நோய் எதிர்ப்பு சக்தியே கொரோனாவுக்கு மருந்து

## சுவிட்சர்லாந்து விஞ்ஞானி உறுதி

மனித உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தி மாத்திரமே கொரோனா வைரஸிடம் இருந்து மனிதர்களைப் பாதுகாக்கும் என்று சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். சுவிட்சர்லாந்தின் பெர்ன் பல்கலைக்கழக நோய் எதிர்ப்புத் துறையின் முன்னாள் இயக்குநர் பேடா எம் ஸ்டாட்லர்(வயது70) என்பவரே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். கொரோனா வைரஸ் குறித்து அவர் எழுதிய கட்டுரையில் இது குறித்து மேலும் கூறியிருப்பதாவது: –

கொரோனாவைப் புதிய வைரஸ் என்று கூறுவது தவறு. இதற்கு முன்பு 2002ஆம் ஆண்டில் சார்ஸ் மற்றும் சார்ஸ் – சி.ஓ.வி – 2 ஆகிய வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு வகைதான் கொரோனா. பொதுவாக குளிர்காலத்தில் வைரஸ் காய்ச்சல்கள் பரவும். கோடை காலத்தில் காணாமல் போய்விடும்.

அது போன்ற வைரஸ் வகைதான் கொரோனா. இந்த வைரஸ் கோடையில் காணாமல் போகும். குளிர்காலத்தில் மீண்டும் முளைவிடும். உலக சுகாதார அமைப்பு முதல் முகநூல் விஞ்ஞானிகள் வரை ஒரு கருத்தை முன்வைக்கின்றனர். அதாவது மனிதர்களின் நோய் எதிர்ப்பு சக்தியால், கரோனா வைரஸிடம் இருந்து தப்பிக்க முடியாது என்கின்றனர். இது முற்றிலும் தவறு, கட்டுக் கதைகளுக்கு ஒப்பானது. மனிதர்களின் நோய் எதிர்ப்புசக்தி மிகவும் வலுவானது. நமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியே கொரோனா வைரஸிடம் இருந்து நம்மை பாதுகாக்கும் திறன் கொண்டது. இந்த கோணத்தில் போதிய ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை என்பதே உண்மை. கணினி மாதிரிகளை அடிப்படையாக வைத்துக் கொரோனா வைரஸ் பரவலை கணித்து வருகின்றனர். குளிர்கால வைரஸ் காய்ச்சலில் ஒரு வகைதான் கொரோனா வைரஸ் என்பதை விஞ்ஞானிகள் நம்ப மறுக்கின்றனர், இன்னும் சிலர், கொரோனா வைரஸின் 2 ஆவது அலை தாக்கும் என்று கூறி வருகின்றனர்.

வைரஸில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்க்காமல் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடுவதிலேயே விஞ்ஞானிகள் ஆர்வமாக இருப்பது வியப்பளிக்கிறது. சீனா முதல் உலக நாடுகள் வரையிலான புள்ளிவிவரங்களை ஆய்வு செய்தால் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொரோனா வைரஸ் பெரும்பாலும் தொற்றவில்லை என்பது தெரியும். குழந்தைகள், சிறாருக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளதே அதற்குக் காரணம் என்றார்.

# ஜப்பானில் உள்ள அமெரிக்கா இராணுவத்துக்குக் கொரோனா!



ஜப்பானின் தெற்கு மாகாணமான ஓகினாவாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து ஜப்பானிலுள்ள அமெரிக்காவின் இராணுவத் தளங்களில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவியுள்ளமை பற்றிய தகவல்களை இவ்விரு நாடுகளம் பகிர்ந்து கொள்கின்றன என்று ஜப்பானிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஓகினாவாவில் 62 நபர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். அதில் 39 பேர் அமெரிக்கத் தளமான மரைன் கார்ப்ஸ் விமான நிலையத்திலும், 22 பேர் கேம்ப் ஹேன்சென் தளத்திலும் உள்ளவர்கள் என்று தெரியவந்துள்ளது. இந்த நிலையிலேயே ஜப்பானும் அமெரிக்காவும் பாதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

ஜப்பானில் அமெரிக்கப் படைகளின் பெரும்பகுதி ஓகினாவாவில் உள்ளது. குற்றங்கள் முதல் விபத்துக்கள் வரை பல பிரச்சினைகளுடன் அமெரிக்க இராணுவத் தளங்களுக்குத் தொடர்பிருக்கின்றது என்று ஓகினாவா மக்களில் பலர் குறிப்பிடுகிறார்கள். மேலும் அங்கு அமெரிக்கக் கடற்படையினரின் இருப்பைக் குறைக்க வேண்டும் அல்லது முற்றிலுமாக வெளியேற வேண்டும் என்றும் விரும்புகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.



சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடந்த டயமண்ட் லீக் இன்ஸ்பிரேன் விளையாட்டுப் போட்டிகளின் ஒருபகுதியாக 300 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் சுவிட்சர்லாந்தின் லியா ஸ்ப்ரங்கர் என்ற வீராங்கனை ஓடுகிறார். கொரோனாத் தொற்றுக் காரணமாகப் பார்வையாளர்களற்ற அந்த அரங்கில் மனித உருவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

# கொரோனா களியாட்டம் இளைஞர் பரிதாபச் சாவு!

அமெரிக்காவில் கொரோனா களியாட்டத்தில் பங்குகொண்ட இளைஞர் ஒருவர் பரிதாபமாகச் சாவடைந்தார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:–

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அமெரிக்காவில் இளைஞர்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் இடையே 'கொரோனா விருந்து' என்கிற புதிய கலாசாரம் பரவிவருகிறது.

இந்தக் கொரோனா விருந்தில் கலந்துகொண்டதன் பின்னர் முதலில் தொற்று ஏற்படுபவருக்குப் பரிசு என்ற விபரீத அறிவிப் பையும் வெளியிடுகின்றனர். இந்த நிலையில், அமெரிக்காவின் டெக்ஸாஸ் நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்தக் கெரோனா விருந்தில் கலந்துகொண்டு தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து டெக்ஸாஸ் மாகாணத்தின் சான் ஆன்டோனியோ பகுதியில் உள்ள மெத்தடிஸ்ட் மருத்துவமனையில் தலைமை மருத்துவ அதிகாரி ஜேன் ஆப்பிள்பை கூறும்போது, ‘அந்த இளைஞர் கொரோனா வைரஸ் என்பது வதந்தி என்று நினைத்திருக்கிறார்.

அதன் காரணமாகவே அவர் அந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். கொரோனா பாதித்தவர் ஒருங்கிணைத்த அந்த நிகழ்வில் கலந்து கொண்டதன் மூலம் அவர் தொற்றுக்கு ஆளானார். சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா வேகமெடுப்பதால் பிரசாரத்தை உடனே நிறுத்துக!

## ஜனாதிபதியிடம் சுகாதாரப் பிரிவு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14

கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரப் பிரிவினர் ஜனாதிபதியிடம் அறிவித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரச் கூட்டங்களில் சுகாதாரச் சட்டத்திட்டங்கள் மீறப்படுவது அவதானிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். பிரசாரக் கூட்டங்களுக்கு உரிய எண்ணிக்கையை விடவும் அதிக மக்கள் வருவது வைரஸ் மேலும் பரவக் காரணமாகி விடும் எனச் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து பிரதான கூட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்துவதற்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

---

# சந்தைகள், தேர்தல் கூட்டங்கள் மிக மிக ஆபத்தான இடங்கள்!

## தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் கடுமையான எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

போக்குவரத்துச் சேவைகள், வர்த்தக சந்தைகள் மற்றும் தேர்தல் கூட்டங்களில் தனிநபர் இடைவெளியை பேணுவது மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தனிநபர் இடைவெளியைக் கவனத்தில் கொள்ளப்படாத நிலைமையை காணக் கூடியதாக இருப்பதாகவும் இது மிகவும் மோசமான கட்டம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான இடங்களில் கொரோனா நோயாளி ஒருவர் இருந்தார் என்றால், பலருக்கு நோய் பரவும் ஆபத்து இருக்கின்றது. அந்த இடங்களில் இருந்தவர்களைப் பின்னர் கண்டறிவது மிகவும் கடினமானது.

இதனால், தனிநபர் இடைவெளியைப் பேணி, சன நடமாட்டம் உள்ள இடங்களுக்கு செல்லும் போது முககவசங்களை அணிவது மற்றும் கைகளை கழுவுவது மிகவும் முக்கியமானது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது போனால், அது பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதுடன் இவ்வாறான நிலைமையில் கடந்த சில மாதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்த நேரிடும். இது மீண்டும் மக்களின் இயல்பு வாழ்க்கையை பின்னோக்கித் திருப்பும்.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள நிலைமையானது இரண்டாவது அலையாக பரவும் ஆபத்து இருந்தாலும் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படாத நோயாளி மற்றுமொரு இடத்தில் இருந்தால், அது இரண்டாவது அலை உருவாக்கும் ஆபத்துக் காணப்படுகிறது.

இதன் காரணமாக நாடு முழுவதும் உள்ள மக்கள் சுகாதார பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டியது அத்தியவசியமானது எனவும் சுதத் சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

---

# பொலனறுவையிலிருந்து யாழ்.வந்த ஒருவருக்கு கொரோனா அறிகுறி!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணத்துக்குத் தொழில் நிமித்தம் வந்திருந்த பொலனறுவை சேர்ந்த ஒருவர் கொரோனா அறிகுறியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

எழுவைதீவில் நீர்வழங்கல் வடிகால மைப்புச் சபையின் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த சனிக்கிழமையே பொலனறுவையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

கொரோனா அறிகுறிகளுடன் எழுவை தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர், தற்போது அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார்.

அவரிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, இன்று இரவு பரிசோதனை முடிவு வெளியாகும். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை அவருடன் தொடர்புடையவர்கள் எழுவைதீவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

---

# கந்தக்காடு நிலைமை கட்டுப்பாட்டில் வரும்!

## இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, ஜூலை 13

கந்தக்காடு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை காணப் படுவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலுள்ள கைதிகளைப் பார்வையிடவென 116 பேர் இதுவரை வருகை தந்திருந்தனர்.



அவர்கள் அனைவரும் வெவ்வேறு பகுதிகளில் தற்போது தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். அந்த அனைவரும் பயணித்துள்ள இடங்கள் அனைத்தும், இந்த வாரத்துக்குள்ளேயே அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஆகவே கந்தக்காடு நிலைமையை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் - என்றார்.

---

# பொலிஸ் பரிசோதகர் கைதானார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகத்தின் பேரில் பொலிஸ் பரிசோதகர் அபுபக்கர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை, அக்கரைப்பற்றிலுள்ள அவரது வீட்டில் வைத்தே, கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்ற காலத்தில், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் அபுபக்கர் கடமையாற்றியுள்ளார்.

தற்போது அம்பாறை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் அவர் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

இந்நிலையிலேயே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரை இன்று கைது செய்துள்ளனர்.

---

# நாட்டை மீண்டும் மூட நேரிடலாம்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸ் தொற்றிய நபர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை

'அடையாளம் கண்டு, அந்த பிரதேசங்க ளுக்குச் செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் சேனால் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காது போனால், நாட்டை மீண்டும் மூட நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், நாடு அப்படியான இடத்துக்கு மீண்டும் செல்வதைத் தவிர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான யோசனைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இன்று கையளிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

# கொரோனா தாண்டவமாடினால் பொதுத்தேர்தல் நடைபெறுமா?



## நிலைமையைப் பொறுத்தே முடிவு என்கின்றார் மஹிந்த தேசப்பிரிய

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்தால் ஆகஸ்ட் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பதை அப்போதைய நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும்.

- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு திட்டமிட்டவாறு இன்று ஆரம்பமாகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தில் இராஜாங்கனைப் பிரதேச செயலகப்பகுதியில் மட்டும் தபால்மூல வாக்களிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸின் தாக்கம் தொடர்ந்து அதிகரிக்குமா? இல்லையா? அல்லது ஆகஸ்ட் 5ஆம் திகதி திட்டமிட்டவாறு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை என்னால் இப்போது உறுதி படக் கூற முடியாது. ஏனெனில், நான் சோதிடம் பார்க்கும் நபர் அல்லன்.

தேர்தல்கள் ஆணைக்குழுவைப் பொறுத்தவரை திட்டமிட்ட திகதிகளில் அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம். வாக்காளர்களினதும் எங்களினதும் பாதுகாப்புக் கருதி சுகாதார வழி காட்டல்களுக்கு அதி முக்கியத்துவம் வழங்கி எமது பணிகளை முன்னெடுக்கின்றோம் - என்றார்.

# சம்பந்தன், சுமந்திரன், செல்வம் போன்ற தமிழினத் துரோகிகளைத் தோற்கடிக்குக!

## வடக்கு, கிழக்கு மக்களிடம் இப்படிக் கோருகின்றார் கருணா அம்மான்

கொழும்பு, ஜூலை 14

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சம்பந்தன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழினத் துரோகிகளை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழர் மகா சபை சார்பாக அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கியுள்ள முதன்மை வேட்பாளராகிய கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன்.

அம்பாறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



ஊடகவியலாளர் சிவராமின் விருப்பத்துக்கு இணங்க - எனது ஆலோசனைக்கமைய - தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் அனுமதியுடன் உருவாக்கப்பட்டதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தனை பிரபாகரனே நியமித்தார். இப்படியான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கவில்லை எனவும், கூட்டமைப்புக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தென்னிலங்கை ஊடகங்கள் முன்னிலையில் சம்பந்தன் பொய்யுரைத்து வருகின்றார்.

இதேவேளை, தமிழ் மக்களின் வாக்குகளினால் நாடாளுமன்றம் சென்றிருந்த கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், இப்போது தமிழரின் ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும், முன்னாள் போராளிகளின் மனதைப் புண்படுத்தியும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

இதற்கிடையில் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான போதைப் பொருள் விற்பனை மன்னன் செல்வம் அடைக்கலநாதன் என்னைப் பகிரங்க சவாலுக்கு அழைத்துள்ளார்.

செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ஆயுதக்குழு கட்சியான ரெலோ கடந்த காலங்களில் வன்னியில் தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்ததையும், தமிழ் யுவதிகளை சீரழித்ததையும் நாம் மறக்கவேமாட்டோம்.

இப்படிப்பட்ட கட்சியின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் வெட்கம் இல்லாமல் என்னைச் சவாலுக்கு அழைக்கின்றார். நான் எவருடனும் எந்த நேரத்திலும் சவாலுக்கு வரத் தயாராக இருக்கின்றேன்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சம்பந்தன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழினத் துரோகிகளை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தோற்கடிக்க வேண்டும். இந்த வரலாற்றுக் கடமையைத் தமிழ் மக்கள் தவறாது செய்தே ஆக வேண்டும் - என்றார்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவின்

# விசாரணைக்குச் செல்வதற்கு ஜே.வி.பி. தலைவர் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 14

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆனணக்குழு தங்களை விசாரணைக்கு அழைப்பதை தடுத்து நிறுத்தக் கோரும் மனுவை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஙனி அபேசேகர ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் குறித்து விசாரணைங்களை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு தமக்கு விடுக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்யுமாறு அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

அவன்காட் நிறுவனத்தை அடிப்படையின்றி கையகப்படுத்தியதன் ஊடாக நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் நிசங்க சேனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து குறித்த விடயம் தொடர்பாக சாட்சியமளிக்க அநுரகுமார திஸாநாயக்க ஜூன் மாதம் ஆணைக்குழுவில் ஆஜரானார்.

இதன் அடிப்படையில் இந்த முறைப்பாடு தொடர்பில் சாட்சியம் பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 17 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர்களின் படங்கள் தாங்கிய

# அறிவித்தல் பலகை அகற்றும் வேலை அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம்!

### அவர்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு

**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம்,ஜூலை14

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மாவட்டச் செயலகம் எடுப்பார் கைப்பிள்ளையாகக் கருதுகின்றதா எனக் குறிப்பிட்டு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் வேட்பாளர்களின் படம் தாங்கிய அறிவித்தல் பலகைகளை அகற்றும் பணிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயன்படுத்துமாறு மாவட்டச் செயலகம் அறிவித்தமை தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தனது கருத்தை 2020.7.13 திகதிய கடிதம் மூலம் மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்திலேயே சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

எந்த எந்த இடங்களில் இவ்வாறான பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பில் தங்களால் அறிக்கை இட முடியும் எனவும், ஆனாலும் அந்தப் பலகைகளை அகற்றுவது தற்போதைய தேர்தல் சூழலில் தம்மை ஆபத்திற்கு உட்படுத்தும் எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## ராஜாங்கனையில் பல இடங்கள் முழுமையாக முடக்கப்பட்டன

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ராஜாங்கணையின் பல இடங்கள் முற்றாக முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த இடங்களுக்கு வெளியிலிருந்து எவரும் உள்ளே செல்லவோ உள்ளேயிருந்து எவரும் வெளியே வரவோ அனுமதி இல்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ராஜாங்கனையைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் மேலும் சிலருக்கும் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தொடர்ச்சியாக தொற்று உறுதியானவர் அடையாளம் காணப்படுகின்றமையை வைரஸ் பரவல் அலையாக கருத முடியாது என்றும் மருத்துவர் ஜாசிங்க குறிப்பிட்டார்.

ராஜாங்கனை, அபராதுவ மற்றும் வெலிகந்த ஆகிய பகுதிகளே தற்போது பிரச்சினைக்குரிய இடங்களாகக் காணப்படுகின்றன என்றும் இந்த பிரதேசங்களில் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை நேற்று முன்னிரவு வரை 2,631 ஆக அதிகரித்துள்ளது.

## சிறுமியைத் தந்தையே வன்புணர்ந்தார் என்ற பொய்க் குற்றம் சுமத்துவதற்குத் தூண்டிய தாய்

தாய் சொல்லிக்கொடுத்தபடியும் தாய் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவும் தன்னை தந்தை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என பொலிஸில் பொய் முறைப்பாடு செய்தார் என அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது மகளான சிறுமி தெரிவித்துள்ளார்.

தந்தை தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தவில்லை எனவும் தாய் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே தான் அவ்வாறு முறைப்பாடு செய்தார் எனவும் சிறுமி அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சுமுது பிரேமச்சந்திர முன்னிலையில் நேற்று சத்தியம் செய்துள்ளார்.

தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தி, சிறுமியின் தந்தைக்கு எதிராக சட்டமா அதிபர் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று மீண்டும்விசாரணைக்குஎடுக்கப்பட்டது.

தன்னை தந்தை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனக் கூறித் தந்தைக்கு எதிராக கெக்கிராவை பொலிஸ் நிலையத்தில் தான் பொய்யான முறைப்பாட்டை செய்ததார் எனவும், தாய் சொல்லிக்கொடுத்தபடி தான் அப்படிச் செய்தார் எனவும் சிறுமி நீதிமன்றத்தில் கூறியுள்ளார்.

இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிபதி பிரேமச்சந்திர, குற்றம் சுமத்தப்பட்டிருந்த சிறுமியின் தந்தையை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடைப்பட்டகாலத்தில், கெக்கிராவை கனேவல்பொல பிரதேசத்தில் தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபர் இலங்கை குற்றவியல் தண்டனைச் சட்டத்தின் கீழ் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி கிறிசாந்த டி அல்விஸ் ஆஜராகி இருந்ததுடன் குற்றம் சுமத்தப்பட்ட தரப்பின் சார்பில் சட்டத்தரணி கயான் சிறிவர்தன ஆஜராகி இருந்தார்.

## உயிரிழந்தவரை அடையாளம் காண கோரிக்கை

பருத்தித்துறை, ஜூலை 14

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபர் ஒருவர் நேற்று இறந்து போனார். அவரை அடையாளம் காண உதவி செய்யுமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர் கடந்த 28 ஆம் திகதி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் கடந்த 3 ஆம் திகதி வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் மரணமடைந்தார். இவர் 61 வயது மதிக்கத்தக்க வயோதிபர் என்று தெரிவிக்கப்படுகிறது .

இவருடைய சடலம் உறவினர்கள் அடையாளம் காணும் வகையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஒற்றையாட்சிக்குள் பௌத்தத்திற்கு முன்னுரிமை பிற மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 14

ஒற்றையாட்சிக்குள் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும் சுதந்திரத்துடனும் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பலவீனப்படுத்தப்பட்ட அரச சேவையை குறுகிய காலத்தில் பலப்படுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை - லுனாவை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த அரசாங்கத்தில் அரசியல் தேவைகளுக்காக பலவீனப்படுத்தப்பட்டிருந்த அரச சேவையை குறுகிய காலத்தில் பலப்படுத்தினோம். அரச துறையினர் முன்னெடுக்கும் சேவைகள் பொது மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள கூடியதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் காணப்பட வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தவும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் அரச சேவையினர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். நெருக்கடியான நிலையில் குறைவான வசதிகளுடன் அரச ஊழியர்கள் மக்களுக்கான சேவைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தார்கள். ஆகவே பலமான அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு முக்கியமானது.

அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், தத்தமது கலாசாரங்களை முழுமையாக பின்பற்றவும் முழு சுதந்திரம் உள்ளது. ஒற்றையாட்சி நாட்டுக்குள் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கி ஏனைய மதங்களின் உரிமைகள் பாதுகாத்து அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சூழ்நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும்.

எமது ஆட்சியில் விகாரை, கோயில், பள்ளிவாசல் மற்றும் தேவாலயம் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டன. அபிவிருத்தி பணிகளின் போது இனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. நாட்டுக்கே அபிவிருத்தி பணிகள் ஒருமித்த விதத்தில் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு , தெற்கு என வேறுப்படுத்தி பார்க்கவில்லை. - என அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவின் மீள் எழுச்சிக்கு அரசே பொறுப்புக்கூறவேண்டும்

## சீறுகிறார் ஐ.தே.க. முன்னாள் எம்.பி.



கொரோனா வைரஸ் நாட்டில் மீண்டும் அதிகரித்திருப்பதற்கு அரமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அரசு தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடக்கத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எண்ணிக்கையில் பரிசோதனைகளை முன்னெடுப்பது அவசியமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, அதனை ஆளுந்தரப்பினர் கேலி செய்தனர் என்றும் அவர் குத்திக்காட்டினார். அதனால் நிலைமை தற்போது தலைகீழாக மாறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு பொது நிர்வாகப் பணியாளர்களின் நலனை முன்னிறுத்தி முன்னெடுத்த அனைத்துச் செயற்திட்டங்களையும் இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் இடைநிறுத்திவிட்டது என்றும் குற்றஞ்சாட்டினார்.

# விமான நிலையத் திறப்பு ஒத்திவைக்கும் சாத்தியம்

## வெளிநாட்டிலுள்ளோர் அழைத்து வருவது இடைநிறுத்தம்

இலங்கையில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறப்பது பெரும்பாலும் ஒத்திவைக்கப்படும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, நாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் போதியளவான தங்குமிட வசதி இன்மையால், இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், வெளிநாட்டில் பணிபுரிபவர்களைத் திருப்பி அழைத்து வருவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு வருகின்றது எனவும், நாடு வழமையான நிலைமைக்கு வந்தவுடன் இது விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் சுமார் 12 ஆயிரம் பேர் இதுவரையில் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய, வெளிநாடுகளிலுள்ள அனைத்து இலங்கைப் பணியாளர்களையும் அழைத்து வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 14

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்காளர்களின் வீடுகளுக்கே வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்காக தபால் திணைக்களத்தின் 75,000 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள், கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 29 ஆம் திகதியின் பின்னர் தபால் ஊழியர்களை பயன்படுத்தி வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என பிரதி தபால் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய காலப்பகுதியில் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள், தாம் வசிக்கும் பகுதியிலுள்ள தபால் நிலையத்துக்கு சென்று ஆள் அடையாளத்தை உறுதிசெய்து அவற்றை பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலையகத்தில் நேற்று தபால்மூல வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 14

பொதுத்தேர்தலுக்கான தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகளின் முதற்கட்டம் நேற்று ஆரம்பமான நிலையில், மலையகத்திலும் சுகாதார நடைமுறைகளைப. பின்பற்றி, அமைதியான முறையில் வாக்களிப்பு இடம் பெற்றது.

தபால்மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்திருந்த சுகாதார பணியாளர்கள், குடும்ப சுகாதார சேவையாளர்கள் உட்பட அனைத்து சுகாதார தரப்பினருக்கும் நேற்று வாக்களிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் அரசநிறுவனங்களில் காலை 9.00 மணிக்கு, சுகாதார ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாக்களிப்பு ஆரம்பமானது. மாலை 4மணிவரை இடம் பெற்றது.





# நிலாவெளி விபத்தில் நேற்று ஒருவர் சாவு!

(அப்துல்சலாம் யாசீம்)



திருகோணமலை, நிலாவெளி பிரதான வீதி ஆறாம் கட்டை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து நிலாவெளி பகுதிக்கு சென்று கொண்டிருந்த லொறி ஓட்டோவுடன் மோதுண்டதுடன், ஓட்டோ மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் நிலாவெளி, 07 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ரவூப் என்றழைக்கப்படும் மொஹிதீன் தீன் தௌபீக் (48வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

குறித்த விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியை கைதுசெய்துள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை நிலாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ராஜபக்ஷக்களின் பிரசாரமே மீண்டும் கொரோனா வைரஸ் பரவக் காரணம்!

## அநுரகுமார பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 14

**பிரசாரக் கூட்டங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் விதிமுறைகள் விதித்த போது அவர் மீதும் ஆணைக்குழு மீதும் ராஜபக்சக்கள் அழுத்தங்களைப் பிரயோகித்தார்கள். மக்கள் மத்தியில் கொரோனாவைக் கட்டுப்படுத்தலில் வெற்றி பெற்றுள்ளதாக இவர்கள் முன்னெடுத்த பிரசாரங்களின் காரணமாகவே நாட்டில் மீண்டும் வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது.**

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்ஷக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளே கொரோனா பற்றி மக்கள் மத்தியில் காணப்பட்ட அச்சம் இல்லாமல் போனமைக்கான காரணமாகும்.

நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் சாதாரண மக்கள் இறந்தால் நெருங்கிய உறவினர்கள் கூட சடலத்தைப் பார்க்க முடியாதவாறு 24 மணித்தியாலங்களில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. ஆனால், ஆறுமுகம் தொண்டமானுடைய சடலம் 5 நாள்கள் வைக்கப்பட்டிருந்தது. பல இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்த நபருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. ஆனால், அங்கு தொற்றுக்குள்ளான நபர் இனங்காணப்பட்ட பின்னர் 400 இற்கும் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என ராஜபக்ஷக்கள் கூறியமையே அதன் ஆபத்து பற்றி மக்கள் அச்சமற்றுச் செயற்பட்டமைக்குக் காரணம்.

இதுவரையில் இனங்காணப்பட்ட பரலைவிட இது பெருமளவு அதிக தொகையாகும். இந்த மத்திய நிலையத்திலிருந்து வெளியில் சென்ற பலர் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

எனவே, ஒரு அபாயமான நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துகொள்ளும் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது சிறந்த தீர்மானமாகும்.

ஆனால், நாட்டுத் தலைவர்கள் தம்மை மட்டும் பாதுகாத்துக்கொண்டால் போதாது. பொதுமக்களுடைய பாதுகாப்பு தொடர்பிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தைத் தோற்றுவிக்க வேண்டியதில்லை. 3 - 4 நாள்களேனும் பாதுகாப்புடன் மக்கள் வீட்டில் இருக்க வேண்டும். அரசியல்வாதிகள் எந்த அதிகாரத்துக்காக எவ்வாறு செயற்பட்டாலும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

# தமிழருக்கு அரசியல் தீர்வு சஜித்தே பெற்றுத் தருவார்

### கூறுகின்றார் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர்



கட்சி வேறுபாடுகளை மறந்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டிய கட்டாயமான தருணத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஏனெனில் அவர்தான் எமக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவார்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

தென்மராட்சியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் விடுதலைப் போராட்டம் செய்திருக்கிறோம். ஆயுதப் போராட்டம் நடத்தியிருக்கின்றோம். வெற்றி பெற முடியாத பாதையில் இன்னும் பயணிக்க வேண்டும் என்று கூறுவது அர்த்தமில்லாதது. நாங்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின் கல்வி பொருளாதார ரீதியில் முன் செல்ல வேண்டும். சர்வதேச நாடுகள் உதவும் என்று கூறுகிறார்கள். ஒரு பெரும்பான்மையை எதிர்த்து ஒரு சிறுபான்மை சமூகத்திற்காக சர்வதேசம் சமூகம் ஒத்துழைக்கும் என்பது நம்ப முடியாத காரியமாகும். எங்கள் நிலப்பரப்பில் எண்ணெய் வளம், தங்கம் இருக்குமாயின் சர்வதேச சமூகம் உதவ முன்வரும். ஆனால், எங்களுடைய நிலப் பரப்பில் அப்படியான வளங்கள் எவையும் இல்லை. பொருளாதார ரீதியாக முன்னுக்கு வருவோமாயின் எமது பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்ள முடியும் எனக் கருதுகிறேன்.

சஜித் பிரேமதாஸ அரசியல் அனுபவமிக்கவர். தமிழ் மக்களின் துன்ப துயரங்களை நன்கறிந்தவர். அவருடைய அணுகுமுறைகள், செயற்பாடுகள் எல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புமிக்கதாக உள்ளன. கட்சி வேறுபாடுகளை மறந்து அவரை ஆதரிக்க வேண்டிய கட்டாயமான தருணத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஏனெனில் அவர்தான் எமக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவார் - என்றார்.

# தோல்வியை ஏற்றுக்கொண்டு உடன் பதவி விலகவேண்டும் ராஜபக்ஷ அரசு

## ஐ.தே.க. வலியுறுத்து

நாட்டில் மீண்டும் அதிகரித்திருக்கும் கொரோனா வைரஸ் பரவல் நிலைக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும். ஆரம்பத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும் எண்ணிக்கையில் பரிசோதனைகளை முன்னெடுப்பது அவசியம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, அதனை ஆளுந்தரப்பினர் கேலிக்குட்படுத்தினார்கள். ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. எனவே, கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தும் அரசு தமது பொதுத்தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நிறுத்தத் தேவையில்லை. மாறாக இதனைக் கட்டுப்படுத்த முடியாத தமது தோல்வியை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் அரச ஊழியர்களின் நலன் மற்றும் உரிமைகள் தொடர்பில் சற்றேனும் கவனம் செலுத்தவில்லை. எனினும், நாம் 2015இல் நல்லாட்சி அரசை உருவாக்கி அரச ஊழியர்களின் ஊதியத்தை அதிகரித்ததுடன், ஓய்வூதியக் கொடுப்பனவிலும் அதிகரிப்பை ஏற்படுத்தினோம். அவர்களது உரிமைகளை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். அரச ஊழியர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செயலாற்றக்கூடிய சூழலை ஏற்படுத்தும் நோக்கில் சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தோம்.

ஆனால், தற்போது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய அரசு, அரச ஊழியர்களின் நலனை முன்னிறுத்தி எமது அரசால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துச் செயற்றிட்டங்களையும் இடைநிறுத்திவிட்டது. அவ்வாறிருக்க நல்லாட்சி அரசால் நிறுத்தப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தருமாறு கோருகின்றார்கள். நாம் ஆரம்பித்தவற்றைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல இயலாதவர்கள் இவ்வாறு கோருவது வேடிக்கையாக இருக்கின்றது.

அரச ஊழியர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசால் மாத்திரமே இயலும் என்பதால், இம்முறை பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பில் அவர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

அடுத்ததாக அரச ஊழியர்களின் ஊதியத்தை அதிகரித்தல் உள்ளிட்ட செயற்திட்டங்கள் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசாலேயே முன்னெடுக்கப்பட்டது. அப்போது பொது நிர்வாக சேவைகள் அமைச்சராகப் பதவி வகித்த கரு ஜயசூரியவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாகவே ஊதியக் கொடுப்பனவில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. எனினும், இவற்றைத் தாம் செய்ததாகக் கூறி, பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பிரசுரித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வாக்குகளைக் கோருகின்றார். சிறிதளவேனும் தலைமைத்துவப் பண்புகளின்றி இவ்வாறு செயற்படுவதற்கு அவர் வெட்கமடைய வேண்டும் - என்றார்.

## இனி இது ........

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2013 இல் வடக்கு மாகாண சபைத் தேர்தலுடன் தான் யாழ்ப்பாண மக்களுடன் வந்து விட்டார் என்று கூறுகின்றார் முன்னாள் முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன். ஆனால் இந்தத் தேர்தலிலும் - ஏழு ஆண்டுகள் கடந்தும்- அவருக்கு இங்கு யாழ்ப்பாணத்தில் வாக்குரிமை இல்லை. அவர் கொழும்பு வாக்காளர்தான். அவரது கட்சியில் இன்னொரு வேட்பாளருக்கும் இங்கு வாக்குரிமை இல்லை.

தமிழ்க் கூட்டமைப்பினர் கொழும்பிலிருந்து தலைவர்களை 'இறக்குமதி' செய்கின்றார்கள் என்று கிண்டலடிக்கும் சைக்கிள் கட்சிக்காரரின் யாழ் மாவட்ட வேட்பாளர்களில் இருவருக்கு யாழில் வாக்குரிமை கிடையாது. ஒருவர் கல்லூரி அதிபர் கணபதிப்பிள்ளை. மற்றவர் சட்டத்தரணி காண்டீபன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதில் சித்திபெறவில்லை. அவர்களின் வேட்பாளர்களில் இருவருக்கும் வாக்குரிமை கொழும்பில். ஒருவர் - சசிகலா ரவிராஜ். மற்றவர் - குருசாமி சுரேந்திரன்.

இன்னொரு வேடிக்கையும் உண்டு. ஒரு முக்கிய சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் ஒரு வேட்பாளர், இலங்கையில் வாக்காளராகப் பதியத் தகுதி பெற்றவர்.

ஆனால் எந்த இடத்திலும் அவரது பெயல் வாக்காளர் பட்டியலில் இல்லை. அதாவது இலங்கையில் எங்கும் அவர் வாக்களிக்க முடியாது. ஆனால் அவரும் நமது வேட்பாளர்தான்.

நம் தலை எழுத்து அதுதான், என்ன செய்வது...!

- மின்னல் -

# விக்னேஸ்வரன் என்னைப் பிணையில் விடுவித்தார் அந்த அபிமானமே அவரை முதல்வராக்கக் காரணம்!

## மனம் திறந்தார் மாவை சேனாதிராசா



யாழ்ப்பாணம், ஜூலை 14

மட்டக்களப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதால் நான் கைது செய்யப்பட்டுப் பிணை மறுக்கப்பட்டிருந்தேன். க.வி.விக்னேஸ்வரன் திருகோணமலைக்கு நீதிபதியாக வந்த பின்னரே எனக்குப் பிணை வழங்கப்பட்டது. அந்த அபிமானத்தினாலேயே அவரை வடக்கு முதலமைச்சராக்கச் சம்மதித்தேன் என தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.



நேற்று தமிழ்பக்கத்தில் ஒளிபரப்பான பேஸ்புக் நேரலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பு மாற்றத்திற்கு எதிராக மட்டக்களப்பில் 1978 செப்ரெம்பரில் பெரும் போராட்டம் நடந்தது. நானும் இங்கிருந்து சென்றேன். ஆயிரம் ஆயிரமாக மக்கள் திரண்டார்கள். பலர் கைது செய்யப்பட்டனர். அரசியல் யாப்பை ஏற்கவில்லை, தமிழீழத்தை அடைய முயற்சிக்கிறோம் எனக் கைது செய்யப்பட்டோம்.

முதல் இருந்த நீதிபதி எங்களுக்குப் பிணையையே மறுத்து விட்டார். எங்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமெனச் சட்டமா அதிபர் திணைக்கள பிரதிநிதிகள் வாதாடினார்கள். ஆனால் நீதியரசர் விக்னேஸ்வரன் எமக்காக வாதாடினார். எம்மைப் பிணையில் விடுவித்தார்.

அவரை முதலமைச்சராக்குவதென்ற போது, இந்த அபிமானத்தால் ஏற்றுக் கொண்டேன்.

தானே எம்மைப் பிணையில் விடுவித்ததாக அவர் அண்மையிலும் கூறியிருந்தார்.

அவர் அண்மையில் இன்னொன்றையும் கூறியிருந்தார். கடந்த அரசில் கன்னியா வெந்நீரூற்றை கூட்டமைப்பு விற்றுவிட்டது, இம்முறை வாக்களித்தால் கோணேச்சரத்தையும் விற்றுவிடும் எனக் கூறியுள்ளார்.

அவர் நீதியரசராக இருந்தவர். படித்தவர். பண்பானவர். உயர்ந்த மனிதராக மதிக்கப்பட்டவர். அவர் இந்தச் சொற்களை பாவித்தமை நல்லதல்ல. – என்றார்.

பிறிதொரு கேள்விக்கு பதிலளிக்கையில், விக்னேஸ்வரனை முதலமைச்சராகத் தெரிவு செய்த முடிவு தவறானதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது உணர்கிறோம். – என்றார்.

## கண்டியில் தாதியர்கள் வீதியில் போராட்டம்!





கொரோனாவைரஸ்தொற்றுப்பரவ ஆரம்பித்த காலத்தில் இருந்தே ஆபத்தை பொருட்படுத்தாது செய்த சேவைக்கான கொடுப்பனவை வழங்குமாறு கோரி, கண்டி தேசிய வைத்தியசாலையின் தாதியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

தாதியர்கள் கடமைகளில் இருந்து விலகி, வைத்தியசாலைக்கு எதிரில் உள்ள வீதிக்கு வந்து தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் தம்மை சுகாதார வீரர்களாக போற்றி பாடல்களை பாடினர் எனவும் ஆடம்பர ஹோட்டல்களில் தங்க வசதிகளை வழங்குவதாகக் கூறினாலும் தாம் செய்த சேவைக்கான கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை என கண்டி தேசிய வைத்தியசாலையின் தாதியர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு வேண்டியது துதிப்பாடலோ, ஆடம்பர ஹோட்டல்களில் தங்கும் வசதிகளோ அல்ல எனவும், தமக்குரிய கொடுப்பனவை சரியான விதத்தில் வழங்குமாறும் அவர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெலிக்கடை 'கொரோனா' கைதியுடன் தொடர்புடைய 492 பேருக்குத் தொற்று!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட கைதியுடன் தொடர்புடைய 492 பேர் இதுவரையில் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

– இவ்வாறு கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மாலை இராஜகிரியவில் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள 492 பேரில் 429 பேர் கந்தக்காடு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மத்திய நிலையத்திலிருந்தவர்களாவர். ஏனைய 47 பேர் அங்குள்ள நிர்வாகத்துறை அதிகாரிகளும், மேலும் 16 பேர் இவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களுமாவர் – என்றார்.

இதில் கருத்துத் தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க –

கந்தக்காடு புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலிருந்து வெலிக்கடை சிறைக்கு போதைப்பொருள் கைதி ஒருவர் மாற்றப்பட்ட வேளை அங்கு கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அதன்பின்னர் கொரோனா பரவல் குறித்து அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் இராஜாங்கனைப் பிரதேசம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசம் தற்போது முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

இராஜாங்கனையில் இனங்காணப்பட்ட நோயாளரின் உறவினரது மரண வீடு மற்றும் மத சம்பிரதாயங்கள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. ஏனைய நாடுகளைப் போன்று வைரஸ் பரவல் குறித்து இலங்கைக்கும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

எனவே, கடந்த மூன்று மாத காலமாகப் பின்பற்றிய நடைமுறைகளை மீண்டும் பின்பற்ற வேண்டியேற்பட்டுள்ளது. எனினும், கந்தக்காடு சம்பவம் போன்று நாடளாவிய ரீதியில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை.

இராஜாங்கனை, வெலிகந்த உள்ளிட்ட சில பிரதேசங்களிலேயே இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது – என்றார்.

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த இருவருக்குக் கொரோனாத் தொற்று

## இராணுவத்தினர் எனத் தெரிவிப்பு

கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் கட்டாயத் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த இரண்டு இராணுவத்தினருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது என அக்குரெஸ்ஸ பொது சுகாதாரப் பரிசோதகர் ஜீ.ஏ.பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அக்குரெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து நடத்திய விசாரணைகளில் உறுதிப்படுத்திய விடயங்களுக்கு அமைய அக்குரெஸ்ஸ, நாவல, ஹேனேகம, பலபாதா பிரசேதங்களிலுள்ள குறித்த இராணுவத்தினரின் குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பியகம தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர குறித்த கொரோனாத் தொற்றாளர்களிடம் பழகிய வர்த்தக நிலைய உறுப்பினர்கள், தனியார் வகுப்புகள் மற்றும் விவசாயக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட 50 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அக்குரெஸ்ஸ பிரதேசத்தில் வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்த சிலருக்கு எதிராகத் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2020 இல் வெளியிடப்பெற்றது.